இருந்தாலும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் வருகின்ற சனி அல்லது ஞாயிற்றுக் கிழமைகளில், ஏதேனும் ஒரு நாளில் பொள்ளாச்சியிலேயே முகாமிட்டு, இதுசம்பந்தமான ஓர் ஆய்வினை நடத்தி, அந்தப் பகுதியிலே காய்ச்சலைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொள்ளாச்சியிலே இந்தக் காய்ச்சல் அறிகுறி வந்தவுடனேயே, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். உடனடியாக பொது சுகாதாரத் துறை இயக்குநரை அங்கு அனுப்பி, ஒரு நாள் முழுவதும் அவர் அங்கு முகாமிட்டு, ஆய்வுக் கூட்டங்களை நடத்தி, வேண்டிய அத்தனை பணிகளும் முழுமையாக முடுக்கிவிடப்பட்டிருக்கின்றன. சட்டமன்றக் கூட்டத் தொடர் நடைபெறுகின்ற காரணத்தினால்தான் நானும், அரசுச் செயலாளரும் களத்திற்குச் செல்ல முடியவில்லை. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க, காய்ச்சல் பாதிக்கப்பட்ட அனைத்துப் பகுதிகளிலும் ஆய்வு செய்து, உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 199, மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. உமா மகேஸ்வரி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

199—

குளிர்பதனக் கிடங்கு

***13276—திருமதி கு. உமா மகேஸ்வரி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விளாத்திகுளம் தொகுதியில் தானியப் பயிர்கள் மற்றும் வற்றல் மிளகாய் ஆகியவற்றிற்கு குளிர்பதனக் கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

2017 ஜூலை 13]

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

விளாத்திகுளம் தொகுதியில், வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின்கீழ் 100 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 100 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதனக் கிடங்கு ஒன்று, மறைந்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால், 27–6–2014 அன்று காணொலி காட்சிமூலம் தொடங்கி வைக்கப்பட்டது. அது தற்போது வியாபாரிகள் மற்றும் விவசாயிகளுடைய பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டு, செயல்பட்டு வருகிறது. ஆகவே, விளாத்திகுளத்தில் உள்ள விவசாயிகளும், வியாபாரிகளும் அதைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதை மாண்புமிகு விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. உமா மகேஸ்வரி அவர்கள்.*

முற்பகல் 11–10

திருமதி கு. உமா மகேஸ்வரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக விவசாயப் பெருமக்களின் பாதுகாவலராக என்றென்றும் விளங்கிய காவேரித் தாய் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியை, மக்களின் பேராதரவுடன் அ.தி.மு.க. அரசைத் தொடர்ந்து நடத்திவரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். விளாத்திகுளம் தொகுதி மக்களின் சார்பாக 2016–2017–ல் இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்பாதங்களில் இந்தக் கோரிக்கை வைக்கப்பட்டது. அம்மா அவர்களின் ஆணையை ஏற்று, குளிர்பதனக் கிடங்கு அமைத்துக் கொடுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குப் பணிவுடன் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். விளாத்திகுளம் தொகுதியில் தானியப் பயிர்கள் மற்றும் வற்றல், மிளகாய் ஆகியவை அதிகம் விளைகின்றன. எனவே, இருக்கக்கூடிய தானியக் கிடங்கு வசதிகளை மேலும் விரிவுபடுத்த அரசு முன்வருமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் தொகுதியில் குறைந்த பரப்பளவில் மட்டுமே தானியப் பயிர்கள் பயிரிடப்படுகின்றன. மிளகாய் பயிர், 5,428 எக்டேரில் பெரும் அளவில் பயிரிடப்படுகின்றன. இதன் உற்பத்தி 6,513 மெட்ரிக் டன் ஆகும். விவசாயிகளின் சுய தேவை நீங்கலாக, விற்பனை உபரி 6,187 மெட்ரிக் டன் ஆகும். இப்பகுதியில் விளைவிக்கப்படும் மிளகாய் விளைபொருள், விளாத்திகுளம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திலும், அருகிலுள்ள மொத்த சந்தை, வாரச் சந்தையிலும் கொள்முதல் செய்யப்படுகிறது. எனவே, தேவைக்கு அதிகமாக அங்கே உற்பத்தி செய்யப்படும் பொருட்களை, விளாத்திகுளம் குளிர்பதனக் கிடங்கில் வைக்கலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தானியக் கிடங்கு வசதியினை மேலும் விரிவுபடுத்த வேண்டுமென்று குறிப்பிடுகிறார். அரசு இடம் இருந்தால், தேவை அறிந்து புதிதாக ஒரு குளிர்பதனக் கிடங்கு அமைக்க, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குப் பரிந்துரை செய்யப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. உமா மகேஸ்வரி அவர்கள்.

திருமதி கு. உமா மகேஸ்வரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டம் 100 சதவிகிதம் வறட்சியைச் சந்தித்த நிலையில், விவசாயப் பெருமக்கள் பொருளாதாரத்தில் நலிவுற்று, தவித்துக் கிடக்கிறார்கள். குறிப்பாக, விளாத்திகுளம் தொகுதி விவசாயப் பெருமக்களின் வாழ்வாதாரத்தினைக் காப்பாற்றும் வகையில், வறட்சி நிவாரணம் வழங்கிய அம்மாவின் அரசு, பயிர்க் காப்பீட்டுத் தொகையையும் விரைந்து வழங்க நடவடிக்கை எடுக்குமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்

2017 ஜூலை 13]

தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய சீரிய முயற்சியினால், ரூ.1,228 கோடி விடுவிக்கப்பட்டு, படிப்படியாக விவசாயிகளுக்கு பயிர்க் காப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. விரைவில் உறுப்பினர் சார்ந்திருக்கிற மாவட்டத்திற்கும், அவருடைய தொகுதிக்கும் வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 200, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நடராஜன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

200—

கால்நடைக் கிளை நிலையம்

***9760—திரு. அ. நடராஜன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, பல்லடம் ஒன்றியம், இச்சிப்பட்டி கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், பல்லடம் தொகுதி மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. அ. நடராஜன் அவர்கள், பல்லடம் தொகுதி, பல்லடம் ஒன்றியம், இச்சிப்பட்டி கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று கேள்வி கேட்டிருக்கிறார். திருப்பூர் மாவட்டம், பல்லடம் தொகுதி, பல்லடம் ஒன்றியம், இச்சிப்பட்டி கிராமத்தில் கால்நடை அலகுகள் 3,000–க்கும் அதிகமாக உள்ளதால், இச்சிப்பட்டி கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, உரிய நடவடிக்கை